**புளத்சிங்ஹள பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 யூன் 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 செப்தெம்பர் 23 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புளத்சிங்ஹள பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பிரதேச சபைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | சபைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக குழுவொன்று நியமித்து மெய்மையாய்வு நடவடிக்கைகள் இடம்பெறுவதுடன் 2019 ஆம் ஆண்டின் போது தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | இருப்புப் பெறுமதியாக பௌதீக இருப்பு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ரூபா 2,691,829 தொகையான புத்தகப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பௌதீக இருப்பு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | புத்தகப் பெறுமதி மற்றும் பௌதீக இருப்பு என்ற இரண்டு மீதிகளையும் கவனத்தில் கொண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) தொங்கல் கணக்குகள்

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 857,690 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதியை இனங்கண்டு கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொங்கல் கணக்கு தீர்த்துவைக்கப்பட வேண்டும். | ஏதிர்வரும் கணக்காண்டின் போது தொங்கல் கணக்கைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (i) | 08 வருடங்களுக்கு முன்பிருந்து கொண்டுவரப்படுகின்ற பெறுமதி சேர் வரியாகக் காணப்படுகின்ற (VAT) ரூபா 410,901 தொகையைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறுமதி சேர் வரிக்குரிய தகவல்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது இந்த மீதியைத் தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் இருந்து கொண்டுவரப்படுகின்ற முறையே ரூபா 71,451 தொகை மற்றும் ரூபா 1,241,665 தொகையான வேலைக் கடன்பட்டோர் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளூராட்சி அமைச்சிலிருந்து நிதி கோரப்பட்டிருந்ததுடன் நிதி கிடைத்த பின்னர் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்காக வேலைக் கடன்கொடுத்தோருக்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,517,328 தொகையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் கணக்காண்டில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் | | | | |
| | (i) 134(1) ஆம் பிரிவு | - | அபிவிருத்தியடைந்த பிரதேசமாக பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட பிரதேசங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ள அசைவுறாத ஆதனங்களின் ஆதன வரிக்காக புதிய கண்டுபிடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது 05 வருடங்களுக்கு ஒருதடவை மேற்கொள்ளப்படுகின்ற ஆதன வரி திருத்தத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| | (ii) 160 ஆம் பிரிவு | - | நிலுவை ஆதனவரி அறவிடும் இறுதிப் படிமுறையாக ஆதனங்கள் தடைசெய்யப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சிவப்பு அறிவித்தல் விநியோகிக்கப்படுவதுடன் ஆதனங்களைத் தடைசெய்யும் செயற்பாடுகள் வரை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | - | சகல காணியும் கட்டிடங்களும் ஒரு வருடத்திற்கு ஒரு தடவையேனும் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணி கட்டிடங்கள் தொடர்பாக குழுவொன்று நியமிக்கப்பட்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | 2015 திசெம்பர் 28 ஆந் திகதிய 1888/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | 48,100 | சபை அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ள 30 அறிவித்தல் பதாதைகளுக்குரிய கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய பெயர்ப் பதாதைகளுக்கு கட்டணம் செலுத்துமாறு உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,318,814 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,069,143 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 3,538,767 | 3,147,502 | 2,927,209 | 708,683 | 3,453,767 | 3,299,717 | 2,669,707 | 980,244 |
| (ii) | வாடகை | 4,960,000 | - | 650,110 | - | 4,760,000 | - | 785,470 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 610,000 | 350.000 | 716,443 | - | 560,000 | 548,995 | 601,765 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 21,580,000 | - | 13,577,105 | - | 21,520.000 | - | 15,390,670 | - |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதனவரி நிலுவை ரூபா 1,180,885 ஆக இருந்ததுடன் ஆண்டின் | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை | உரிய நிலுவையை அறவிடுவதற்காக தற்போது சிவப்பு அறிவித்தல் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் |

| | | | |
|---|---|---|---|
| | போது அதில் ரூபா 543,743 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | எடுக்கப்பட வேண்டும். | தடைசெய்யும் அனுமதிப்பத்திரம் விநியோகித்து ஆதனங்களைத் தடைசெய்யும் செயற்பாடுகள் வரை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,226,240 தொகையான நிலுவை ஆதன வரித்தொகை 2019 யூன் 30 வரையில் ரூபா 875,122 வரை குறைவடைந்திருந்ததுடன் அந்த மீதியில் 01 முதல் 03 வருடம் வரை 1043 அலகுகளில் இருந்து ரூபா 661,320 தொகை, 03 முதல் 05 வருடம் வரை 240 அலகுகளில் இருந்து ரூபா 195,213 தொகை மற்றும் 05 முதல் 10 வருடம் வரை 25 அலகுகளில் இருந்து ரூபா 18,589 தொகையான நிலுவையும் உள்ளடங்கியிருந்தன. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

----------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் என்பன முறையே ரூபா 12,689,345 தொகை மற்றும் ரூபா 5,735,667 தொகை ஆக இருந்தன. முத்திரைக் கட்டணத்திலிருந்து எந்தவொரு தொகையும் கிடைக்காதிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 5,527,115 தொகை கிடைத்திருந்தது. | உரிய வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டணப் பட்டோலை தயாரித்து மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் 2018 ஆம் ஆண்டின் பட்டோலை தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் உரிய பணத்தை இவ்வாண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செயல்நடவடிக்கைத் திட்டம் | | |
| (i) | பௌதீகத் திட்டம் மற்றும் வீதிகளின் கீழ் வீதிகளை புதிதாக நிர்மாணிப்பதற்காக பாதீட்டின் மூலம் ரூபா 2.5 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அதற்கான செயற்திட்டம் இனங்காணப்படாமல் 2018 ஆம் ஆண்டில் ரூபா 1.17 மில்லியன் கிரயமான 03 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படடிருந்தன. | பாதீட்டு நிதிஏற்பாட்டின் கீழ் இனங்காணப்பட்ட செயற்திட்டங்களை செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 2014 பெப்ரவரி 14 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 3(ஆ) பிரிவின் படி செயல்நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்த்த பூர்த்தி மற்றும் விளைவுகளுக்கிடையே செயலாற்றலை மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் 05 நிகழ்ச்சிதிட்டங்களின் கீழ் ரூபா 108.64 மில்லியன் பாதீட்டு நிதிஏற்பாட்டிற்காக 131 செயற்பாடுகள் இனங்காணப்பட்டு பொறுப்புக்கள் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்பாடுகளின் அடைவினை அளவிடும் முறைமையொன்று சபையிடம் காணப்படவில்லை. | உரிய சுற்றறிக்கையின் படி செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| | | |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், அந்த நோக்கங்களுக்காக புதிய உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது மகக்ளின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நீண்ட காலத் திட்டமொன்று தயாரித்து குறிப்பாக பொறுப்புக்கள் கையளிக்கப்படவில்லை. | நிலைபேறான நோக்கங்களை நிறைவேற்றுவதற் குரிய நீண்ட காலத் திட்டமொன்று தயாரித்து குறிப்பாக பொறுப்புக்கள் கையளிக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக 2019 சனவரி 24 ஆந் திகதி நடைபெற்ற செயலமர்வின் போதே சபை அறிந்திருந்தது. அக் காரணத்தின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டில் நீண்ட காலத் திட்டமொன்று தயாரித்து குறிப்பாக பொறுப்புக்கள் கையளிக்கப்படவில்லை. 2019 ஆம் ஆண்டில் உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறவேண்டிய சம்பள மீளளிப்புக் கணக்கில் காணப்படுகின்ற ரூபா 4,675,992 தொகையான செலவு மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 யூலை 01 ஆந் திகதி முதல் நூலகர், வருமானப் பரிசோதகர், முன்பள்ளி ஆசிரியர், வேலைப் பரிசோதகர், இயந்திர செயற்படுத்துனர் பதவிகளில் ஒருவர் வீதம் வெற்றிடமாகக் காணப்பட்டனர். | பதவியணியனரின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நூலகர் பதவிக்காக மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ள து. வருமானப் பரிசோதகர் பதவியில் வழக்கொன்று காணப்டுவதனால் ஆடசேர்ப்புக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | | கைவிடப்பட்டுள்ளது. மிகுதிப் பதவிகளுக்காக எதிர் காலத்தில் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் 03 ஊழியர்களிடமிருந்து அறவிடப்படாதுள்ள கடன் மீதி ரூபா 82,002 ஆகும். | நிலுவைக் கடன் மீதி விரைவாக அறவிடப்பட வேண்டும். | கடனை அறவிடுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் ரூபா 35,399,870 தொகை செலவில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த புதிய சந்தைத் தொகுதிக் கட்டிடம் 2019 மே 31 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | ஆக்கபூர்வமானதான வருமானங்களை உழைப்பதற்கு ஈடுபடுத்த வேண்டும். | மின்சார வசதிகளைப் பெற்றுக்கொள்ளும்வ சதியீனத்தின் அடிப்படையில் இந்தப் பணிகள் நிறைவேற்றப்படாதிரு ந்ததுடன் தற்போது இந்தப் பணிகள் நிறைவேற்றப்படுகின் றது. |

**3.5 பெறுகை**

**3.5.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்காக சபையினால் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | பெறுகைத் திட்டமொன்று 2019 ஆம் ஆண்டில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5.2 ஒப்பந்த நிராவாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.9.1 ஆம் பிரிவின் பிரகாரம் சமூக அடிப்படையஜலான அமைப்புக்களுக்காக நேர் ஒப்பந்த முறையின் கீழ் ஒப்பந்தத்தை கையளிக்கும் போது சுற்றிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளாமல் ரூபா 1,192,201 தொகை ஒப்பந்தச் சங்கததிற்கு செலுத்தப்பட்டிருந்தது. | தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இந்த நிலையை சரிசெய்து குழுவொன்றின் மூலம் உரிய பரிந்துரைகளைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) மில்லகஹவில பன்சல அருகில் பொது வீதியை அபிவிருத்தி செய்வதற்காக களண மித்துறு நலன்புரிச் சங்கத்திற்கு ரூபா 296,236 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் நிர்மாணத்தின் பௌதீக பரிசோதனையின் போது வீதியில் கல் வெளிப்பட்டு தரம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | ஒப்பந்தங்களுக்காக ச் செலுத்துவதற்கு முன்னர் அவற்றின் தரம் சரியாக பௌதீக ரீதியில் பரீட்சித்து கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | இந்த நிலையை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2014 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் 4.1.1 மற்றும் 2017 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் 2.2.1 (ஏ),(ஐ),(ஒ),(ஓ),(ஔ),(க),(கா) என்ற கணக்காய்வுப் பந்திகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய சீராக்கங்கள் எதிர்வரும் கணக்காண்டின் போது மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |